**வெலிகம பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 9 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 17 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து வெலிகம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மான வேலை கடன் கொடுத்தோர் ரூபா 4,275,950 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நாட்குறிப்பின் மூலம் சரி செய்வேன். |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மான வேலைக் கடன்பட்டோர் ரூபா 852,446 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நாட்குறிப்பின் மூலம் சரி செய்வேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 4,821,816 தொகைக்கான 04 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் / பட்டோலைகளில் காட்டப்பட்டிருந்த மீதிகள் இடையே சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 95,825 தொகையாக இருந்தது. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) | | | |
| (i) விதி 204 | பண்டக் கணிப்பீட்டில் சுட்டிக்காட்டியிருந்த பற்றாக்குறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பற்றாக்குறைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 217 | சபைக்குச் சொந்தமான 08 காணிகள், காணிகள் கட்டடங்கள் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iii) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீது வருடாந்த கணிப்பீடு ஒன்று நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | காணிகள் கட்டடங்கள் தொடர்பான கணிப்பீடு தற்போது ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் சுமார் 60 சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 88,203,142 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 61,505,655 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 25,530,000 | 19,243,110 | 11,122,128 | 9,660,894 | 3,955,200 | 3,610,693 | 3,424,594 | 1,539,912 |
| வாடகை | 3,698,000 | 2,749,988 | 2,807,592 | 1,295,296 | 3,735,600 | 3,245,491 | 2,654,143 | 1,352,900 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 10,655,500 | 2,556,450 | 2,679,121 | 1,680,329 | 5,667,500 | 11,112,302 | 10,809,302 | 1,803,000 |
| ஏனைய வருமானங்கள் | 120,589,200 | 116,637,093 | 30,911,101 | 269,862,720 | 60,655,000 | 78,512,849 | 33,411,971 | 184,136,728 |
| மொத்தம் | 160,472,700 | 141,186,641 | 47,519,942 | 282,499,239 | 74,013,300 | 96,481,335 | 50,300,010 | 188,832,540 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 1,356,560 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 13,468,978 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 14,825,538 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 5,474,344 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 9,351,194 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| ஆரம்ப நிலுவை ரூபா 120,161 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 10,278 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 130,439 தொகை அறவிடப் பட வேண்டிக் காணப்பட்டது. மொத்த அறவீடுகள் ரூபா 4,329 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 126,110 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. அறவீடு களின் முன்னேற்றம் நூற்றிற்கு 03 சதவீத அளவான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆதனக் கணிப்பீடு மேற் கொள்ளப்பட்டு காணிகளை சரியாக இனங்கண்டு நிலுவைத் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான 30 கடைகளில் இருந்து ரூபா 874,765 இற்கான வாடகைத் தொகையொன்று நிலுவையாக காணப்பட்டது. | நிலுவை வாடகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | தற்போது வரை ரூபா 96,228 இற்கான தொகையொன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், மீதி நிலுவைத் தொகை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

**நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 15,828,590 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 251,410,577 தொகை ஒன்று முத்திரைக் கட்டணம் பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பிரதான செயலாளர் மற்றும் ஆளுனருக்கு விண்ணப்பித்துள்ளேன். |

### 2.2.5 மிகை விதிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டிய ஆட்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 7,495,624 தொகைக்கான 09 மிகை விதிப்புக்கள் விதிக்கப்பட்டிருந்தன. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சட்டத்தின் பிரகாரம் மிகை விதிப்புக்களை அறவீடு செய்தல் உள்ளூராட்சி ஆணையாளரின் பொறுப்பொன்றாகும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை மதிப்பீடு

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### 3.1.1 குறிக்கோள்களுக்கு புறம்பான செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதங்கல எரிகொட்டகை நிர்மாணிக்கும் வேலைக்காக 2010 ஜனவரி 28 ஆம் திகதி தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 4,360,000 தொகை மீண்டுவரும் செலவுகளுக்காக செலவிடப்பட்டிருந்தன. | உரிய குறிக்கோள்களின் பிரகாரம் செலவிடப்பட வேண்டும். | நிறுவனத்தின் மூலதன மற்றும் மீண்டுவரும் செலவுகளுக்காக செலவிடப்பட்டது. |

#### 3.1.2 கை விடப்பட்ட செய்பணிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டின் போது ஸொலிட் லோட்ஸ்டார் நிறுவனத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 7,380,000 தொகையில் ரூபா 3,020,000 தொகை செலவிடப்பட்டு நிதங்கல எரிகொட்டகையின் நிர்மாண வேலை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் எதிர்பார்த்த பயனை பெற்றுக்கொள்ளாமல் கைவிடப்பட்டு இருந்தது. | கைவிடப்பட்ட செய்பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | எதிர்காலத்தில் மகப்பேற்று மற்றும் சிறுவர் பிணிஆய்வு நிலையம் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.1.3 செய்பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வரகாபிடிய எரிகொட்டகை | செயற்திட்டங்கள் உரிய காலப் பகுதி பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிரக்காலத்தில் மகப்பேற்று மற்றும் சிறுவர் பிணி ஆய்வு நிலையம் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | தெனிபிடியவில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள விசேட பொருளாதார நிலையம் | செயற்திட்டங்கள் உரிய காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 பாதீட்டு பிரேரணையின் மூலம் தயாரிப்பதற்கு திட்டமிட்டுள்ளேன். |
| (iii) | இரவு – பகல் கரப்பந்து விளையாட்டுத் திடல் நிர்மானித்தல் | செயற்திட்டங்கள் உரிய காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வேலையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.1.4 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குப்பைகளை அகற்றுவதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று காணப்படாமையின் காரணத்தினால் தனியார் காணிகளில் இடப்படும். குப்பைகளை மண் போட்டு மூடுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 11,607,740 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்யப்பட வேண்டும். | குப்பை மெட்ரிக் தொன் 15 இற்கும் 20 இற்கும் இடைப்பட்ட அளவொன்று நாளாந்தம் சேகரிக்கப்படுவதுடன் அந்த குப்பைகள் சில காலத்துக்கு முன் கைவிடப்பட்ட தேங்காய் மட்டை குழிகளுக்கும் சுண்ணாம்பு தோண்டப்பட்ட குழிகளுக்கு போடப்பட்டு மண்ணால் மூடப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| (ஆ) குப்பை அகற்றுவதற்காக பரிமாற்றப்பட்டிருந்த கராந்துவ கடலான காணிக்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரை கிடைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக இறுதி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இயந்திரங்கள் மூலமாக சேதனப் பசளை உற்பத்திக்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.1.5 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபை யினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்கு களை அளவை செய்வதற்காக சுட்டிகள் இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்தம் இலக்குகளை நெருங்குவதற்கான முன்னேற்றத்தினை அளவை செய்ய வேண்டும். | சபையினால் 2019 ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் குறைந்த வருமானம் உடையோர்களுக்கு வீடமைப்பு உதவி வழங்குவதற்காக ரூபா 12,500,000 தொகை சபை நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்டு அதற்காக மீளாய்வாண்டு ஜுன் 10 ஆம் திகதி தயாரிக்கப்பட்டிருந்த செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் இலக்காகிய நலன்பெறுவோர் இனங்கானப்பட்டிருந்ததில் நிலையான வீடுகள் இல்லாத அங்கவீன நபர்களாகும். 2019 திசெம்பர் 10 ஆம் திகதி வரை 81 நலன்பெறுவோருக்காக | மூலப்பெறுமானங்களை தீர்மானித்து இலக்காகிய நலன்பெறுவோர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். | இந்த முறைமையினை சிக்கலின்றி தெளிவுபடுத்திக் கொள்வதற்காக எடுக்கப்பட்ட சில மூலப்பெறுமானங்களுடன் புள்ளி வழங்கும் முறை ஒன்றுடன் நலன்பெறுவோரை தெரிவு செய்யும் நடைமுறை ஒன்று தயாரிக்கப்பட்டது. |

ரூபா 3,240,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 10 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது நிரந்தர வீடுகளை உடைய 7 குடும்பங்களுக்கும் வீடமைப்பு உதவி வழங்கப்பட்டிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| பதவியணித் திட்டத்தினை அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 14 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 22 மிகைப் பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகை பதவிகளை முறைப்படுத்துதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | 29/2019 சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தரப்படுத்துவற்காக உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ள பதவிகள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் ஆரம்ப தரத்தில் காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஊளியர்கள் 05 பேரிடம் அறவிப்படாமல் காணப்பட்ட ரூபா 310,542 தொகைக்கான கடன்மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவிடப்பட வேண்டும். | உரிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3.4 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான மூன்று கடைத்தொகுதிகளைச் சேர்ந்த 23 கடைகளில் இருந்து ரூபா 371,361 இற்கான ஒரே முறையில் செலுத்தும் பணம் 2006 ஆண்டு முதல் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒரே முறையில் செலுத்தும் பணத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் இலக்கம் தபச/5/6/பொது மற்றும் 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் 13 கடைகள் தொடர்பாக 03 வருடங்களுக்கு ஒருமுறை உடன்படிக்கையை நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காததுடன் 05 வருடங்களுக்கு ஒருமுறை 17 கடைகளின் பெறுமதி மதிப்பீட்டு வாடகை திருத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சந்தைக் கடைத்தொகுதிகள் மிகவும் தேய்வடைந்த நிலையில் காணப்படுவதால் திருத்தி வேலை மேற்கொள்ளப்பட்டு பெறுமதி மதிப்பீட்டு வாடகை பெற்றுக்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | சபைக்குச் சொந்தமான சந்தைக் கடைத்தொகுதியில் அமைந்துள்ள கடைகளை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பான வாடகை உடன்படிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு மாதத்தை விட மிகையான வாடகை செலுத்தத் தவறிய 23 கடை வாடகையாளர்களுக்கும் 4 ஆம் பிரிவின் பிரகாரம் 11 கடைகளின் அங்கீகாரமற்ற நிர்மான வேலைகளுக்காகவும் மற்றும் உடன்படிக்கையின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்படாத வியாபாரங்கள் நடாத்தும் மிரிஸ்ஸ சந்தையின் கடை அறை ஒன்று தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுக்க செயற்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தற்காலிக அங்கீகாரமற்ற நிர்மான வேலைகளை அகற்றுவதற்கு கடை உரிமையாளர்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுப்பேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற / குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திறைசேரி செயலாளரின் 2018 மார்ச் 19 ஆம் திகதி இலக்கம் 01/2018 கொண்ட சொத்துக்கள் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 06 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆக்கபூர்வமான கருமங்களுக்கு ஈடுபடுத்துதல் அல்லது பயன்படுத்த முடியாவிடின் அப்புறப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | அப்புறப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பேன். |

**3.5.2 சொத்துக்களில் இருந்து பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான 04 காணிகளில் தென்னை மற்றும் செவ்விளநீர் விளைச்சளை குத்தகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையின் ஆதனங்களை குத்தகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | மூன்று சந்தர்ப்பங்களில் கேள்வி அழைக்கப்பட்ட போதிலும் அதற்காக கேள்விதாரர் எவரும் முன்வந்திருக்கவில்லை. |

**3.5.3 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 04/05/09 மற்றும் 2019 ஜூலை 29 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் 10 மயானங்கள் தொடர்பாக காணிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறிவுறை கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.6 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தென் மாகாண பிரதான செயலாளரின் இலக்கம் 03/2014 மற்றும் 2014 ஒக்தோபர் 15 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (1:2:4) ¾ 20 கிரேட் அளவில் கொங்கிரீட் போடும் போது தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அறிமுகப்படுத்தியுள்ள கனமீற்றர் ஒன்றிற்கு ரூபா 17,228 ரேட் பயன்படுத்தப்பட வேண்டியுள்ள போதிலும் மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து அபிவிருத்தி செய்யப்பட்ட 03 பாதைகள் தொடர்பாக தென் மாகாண கட்டிடங்கள் பணிப்பாளரின் CT-08 கனமீற்றர் ஒன்றிற்கு ரூபா 19,155 ரேட் பயன்படுத்தப்பட்டமையால் ரூபா 135,276 தொகை மிகையாக செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | மீளாய்வாண்டு முதல் அரையாண்டு வரை 1:2:4 (20) கொங்கிரீட்களுக்காக BSR விலைகள் பயன்படுத்தப்பட்டதுடன் அதன் பின்னர் HSR விலைகள் பயன்படுத்துகின்றேன். |